
# குழந்தைகளுக்கான கண் அறுவை சிகிச்சைக்குப் பின் பெற்றோர்கள் செய்ய வேண்டியவை





| | |
|---|---|
| 7 Day(s) / நாட்கள் (25-Dec-2021 - 31-Dec-2021) | 6 Time(s) a Day / வேளைகள் (7 am,10 am,1 pm,4 pm,7 pm,10 pm) |
| 7 Day(s) / நாட்கள் (01-Jan-2022 - 07-Jan-2022) | 5 Time(s) a Day / வேளைகள் (7 am,11 am,3 pm,6 pm,10 pm) |
| 7 Day(s) / நாட்கள் (08-Jan-2022 - 14-Jan-2022) | 4 Time(s) a Day / வேளைகள் (7 am,12 pm,5 pm,10 pm) |
| 7 Day(s) / நாட்கள் (15-Jan-2022 - 21-Jan-2022) | 3 Time(s) a Day / வேளைகள் (7 am,2 pm,10 pm) |
| 7 Day(s) / நாட்கள் (22-Jan-2022 - 28-Jan-2022) | 2 Time(s) a Day / வேளைகள் (7 am,7 pm) |
| 7 Day(s) / நாட்கள் | 1 Time(s) a Day / வேளைகள் |

கொடுத்துள்ள அட்டவணைபடி நேரம் தவறாமல் சொட்டு மருந்தைப் போடவும்.



குழந்தையின் பெற்றோர் மருந்தை உபயோகப்படுத்தும் முன் கைகளை சுத்தமாக கழுவ வேண்டும்



தண்ணீரையும் பஞ்சையும் கொதிக்க வைக்கவும். கொதித்த தண்ணீரில் உள்ள பஞ்சை தண்ணீர் இல்லாமல் பிழியவும்



அந்தப் பஞ்சைக் கொண்டு மேல் இமையையும் கீழ் இமையையும் சுத்தம் செய்யவும்



தலைக்கு குளிக்கும் வரை ஈரத்துணியை வைத்து முகத்தினை சுத்தம் செய்து கொள்ளவும்



மருந்து டப்பா மூடியை அழுத்தி திறந்தாலே அது திறந்து கொள்ளும்



தூசி மற்றும் புகையில் செல்வதை 1 மாதத்திற்கு தவிர்க்கவும்



கண்ணின் கீழ் இமையை இழுத்துப் பிடித்து, கண் குழிக்குள் மருந்து போட வேண்டும்



மருந்து போட்டபின் 1 நிமிடம் கண்களை மூடி இருக்கவும்



மருத்துவரின் ஆலோசனையின்படி மறுபரிசோதனைக்கு வர வேண்டும்



வழக்கமாக எடுத்துக் கொள்ளும் உணவுகளில் எளிதாக மெல்லக் கூடிய உணவுகளை சாப்பிடலாம்



1 வயது வரை குழந்தைக்கு தூங்கும் நேரத்தில் மருந்து போடவும்



2–15 வயது வரை குழந்தையின் தலையை லேசாக சாய்த்து/படுக்க வைத்து கண்ணில் மருந்து போடவும்




1 முறை பயன்படுத்திய பஞ்சை மறுமுறை பயன்படுத்தக் கூடாது



1 மாதத்திற்கு பகலில் பாதுகாப்பு கண்ணாடி அணிந்து கொள்ளவும்



அறுவை சிகிச்சை செய்து 1 மாதம் கழித்து வீட்டிற்கு வெளியில் விளையாடலாம்




மறுபரிசோதனை தேதியை மாற்ற விரும்பினால் Discharge Summary–இல் உள்ள தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்



1 மாதம் கழித்து ஷாம்பு தேய்த்து தலைக்குக் குளிக்கலாம்

# குழந்தைகளுக்கான கண் அறுவை சிகிச்சைக்குப் பின் பெற்றோர்கள் செய்யக் கூடாதவை



மருந்து டப்பாவை ஊக்கு, குண்டுசி வைத்து திறக்கக்கூடாது



சொட்டு மருந்து பாட்டிலின் நுனியை கைகளால் தொடக்கூடாது



ஏரி, குளம் மற்றும் கடற்கரையில் 6 மாதத்திற்கு குளிக்கக்கூடாது




மருந்து பாட்டில்களை அசுத்தமான இடத்தில் வைக்க வேண்டாம்



குழந்தைகளுக்கு எட்டும் தூரத்தில் மருந்து பாட்டில்களை வைக்க வேண்டாம்



அறுவை சிகிச்சை செய்த கண்ணை கசக்கவோ துணி வைத்து தேய்க்கவோ கூடாது